## THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

**M.C.O.P.No.62/2019**

Deposition of RW.1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 10.01.2024.

**Evidence Recorded Time: 04.31 P.M. to 04.50 P.M**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கிருஷ்ணமூர்த்தி | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | ஆண்டி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**கூடுதல் முதல் விசாரணை:-**

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது கூடுதல் சத்திய பிராமாண வாக்கு மூலம் தாக்கல். அதில் கண்ட சங்கதிகளை படிக்க கேட்டு அவைகள் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மைதான். பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்,

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.4- | - | மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மருத்துவ - பில்களை பொறுத்து ஆய்வு செய்யப்பட்ட Investigation Report |

எனவே 3ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடியாக வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை -**

TN 52 A 9916 என்ற வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 22.04.2019-ம் தேதி ஏற்பட்ட விபத்தை பற்றி எனக்கு ஆவணங்கள் அடிப்படையில்தான் தெரியும் என்றால் சரிதான். விபத்து நடந்த உடன் கிளைம் பார்ம் பெற்றோமா என்றால் பெற்றோம், அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறோம். விபத்து சம்மந்தமாக காவல் துறையினர் விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் மீதுதான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் ஓட்டி சென்ற வாகனம் டிவிஎஸ் எக்ஸ்எல் வாகனம்

என்றாலும் அது கீயர் இல்லாத வாகனம் என்றாலும் சரிதான். கீயர் இல்லாத வாகனத்திற்கு தலைக்கவசம் அணியவேண்டும் என்பது கட்டாயம் இல்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் திடீரென வாகனத்தை ரோட்டின் வலதுபுறம் திருப்பியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை, குற்றபத்திரிக்கை தவறு என்று நீக்குரவு செய்ய மனு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. விபத்து 1ம் எதிர்மனுதாரரால் ஏற்பட்டதால் இழப்பீட்டு தொகை கொடுக்க எங்கள் நிறுவனம் கடைப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர்தான் வாகனத்தை அதிவேகமாகவும், ஆஜாக்கரதையாகவும் வாகனத்தை இயக்கி இந்த விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரர் கவனக்குறைவாகவும் , ஆஜாக்கரதையாகவும் வாகனத்தை இயக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த மனுதாரருக்கு ஏற்பட்ட நிரந்தர ஊனம், வலி, வேதனை அனைத்திற்கும் நாங்கள் தான் ஈடு செய்யவேண்டும் என்றால் சரியல்ல. மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு குறைவானது மற்றும் நியாமானதும் ஆகும் என்றால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள கங்கா மருத்துவமனை மற்றும் கோகுலம் மருத்துவமனைகளில் செலவு செய்த மருத்துவ பில்கள் அனைத்தும் மருத்துவமனையில் செலவு செய்த தொகைகள் உண்மைதான் என்றால் அவை அனைத்தும் உண்மைதான். ரூ.3,00,000/- தொகை மருத்துவ காப்பீடு மூலம் ஈடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தொகையை மருத்துவ காப்பீடு மூலம் 1 அல்லது 2ம் எதிர்மனுதாரரால் செலவு செய்யப்பட்டது அல்ல என்றால் சரிதான். மருத்து காப்பீட்டு தொகையானது மனுதாரரின் மகன் எடுத்த மருத்து காப்பீடு மூலம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். இந்த பாலிசிக்கான தொகை எங்கள் நிறுவனம் மூலமாகவோ, மற்ற எதிர்மனுதாரர்கள் மூலமாகவோ செலுத்தப்படவில்லை என்றால் சரிதான். மனுதாரர் எடுத்துக்கொண்ட மருத்துவ சிகிச்சைகள் அனைத்தும் வாகன விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டவை என்றால் சரிதான். மகனின் மருத்துவ காப்பீட்டில் மனைவி, குழந்தைகள், பெற்றோர்கள் அனைவரும் சேர்த்து எடுக்கப்பட்ட காப்பீடு என்றால் அதுபற்றி தெரியவில்லை. மனுதாரர் மகன் எடுத்த மருத்துவ காப்பீட்டினால் ஒரே ஆண்டில் ஒன்றிற்கு மேற்பட்டவர்களக்கு அந்த காப்பீட்டை பயன்படுத்த முடியாது என்றால் அதுபற்றி தெரியாது. விபத்து ஏற்பட்ட சமயத்தில் எங்கள் நிறுவனமோ, மற்ற எதிர்மனுதாரர்களோ

இடைக்கால இழப்பீடு வழங்கியுள்ளோமா என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தால் விபத்து ஏற்பட்டிருக்கும் நிலையில் மனுதாரர் மகன் எடுத்து மருத்துவ காப்பீட்டு மூலம் ஈடு செய்த தொகையை எங்கள் நிறுவனம் வழங்க கடமைப்படவில்லை என்று மறுப்பது தவறு என்றால் சரியல்ல. மனுதாரரின் மகன் தனது சுய பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்ட ஈட்டு தொகையை எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தினால் ஏற்பட்ட இழப்பீட்டிற்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றாலும், என்னுடைய கூடுதல் பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை.

ஒம்/–RW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.